செய்தி வெளியீடு எண். 310 நாள்.4.4.2010

<u>செய்தி வெளியீடு</u>

# சமூக விரோதிகளால் படுகொலை செய்யப்பட்ட திருவாரூர் ஒன்றியம், மாங்குடி கிராம ஊராட்சி மன்றத் தலைவரின் தம்பிக்கு கருணை அடிப்படையில் ஓட்டுநர் பணி நியமனம்!

## முதலமைச்சர் கலைஞர் ஆணை!

**திருவாரூர் ஒன்றியம், மாங்குடி ஊராட்சி மன்றத் தலைவராகத் திகழ்ந்த ஜெயக்குமார், சிறப்பான முறையில் பொதுத் தொண்டாற்றி ஊராட்சிப் பணிகளை மெச்சத்தக்க வகையில் நிறைவேற்றியதால் அவருக்கு ஏற்கனவே குடியரசுத் தலைவரின் நிர்மல் கிராம புரஸ்கார் விருது வழங்கப்பட்டது. மாங்குடி ஊராட்சிப் பகுதியில் கள்ளச்சாராயத்தை ஒழித்திட தீவிர முயற்சிகளை மேற்கொண்டார். அவர் சமூக விரோதிகளால் படுகொலை செய்யப்பட்டார்.**

**மிகச்சிறந்த முறையில் பொதுச்சேவையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட அவரது பணிகளைப் பாராட்டியும், அவரது குடும்பத்தின் ஏழ்மை நிலையைக் கருத்தில் கொண்டும், தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நலக் கழகம் மற்றும் வேலைவாய்ப்பு அலுவலகம் ஆகியவற்றின் மூலம் நிரப்பப்பட வேண்டும் என்னும் விதிக்கு விலக்களித்து, சிறப்பு நிகழ்வாக மறைந்த ஜெயக்குமாரின் தம்பி திரு.மு.பாஸ்கரன் என்பவருக்கு கருணை அடிப்படையில், திருவாரூர் மாவட்ட சமூக நல அலுவலகத்தில் காலியாகவுள்ள ஓட்டுநர் பணியிடத்தில் நியமனம் வழங்கிட முதலமைச்சர் கலைஞர் இன்று (4.4.2010) ஆணையிட்டுள்ளார்.**

* * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை,தலைமைச் செயலகம், சென்னை–9.